பக்கங்கள் 15 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

**6 கோடி ரூபா பெறுமதியான**

## ஹெரோயினுடன் இளைஞர் கைது!



சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்தி 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 29 வியாழக்கிழமை 11.04.2024 அதிர்வு 255



# எந்தச் சின்னத்தில் களமிறங்குவது?

## ஆராய்கின்றார் ரணில்

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிட வேண்டிய சின்னம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்து வருகின்றார் எனத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை தேசிய பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க எதிர்கொள்ள வேண்டும் எனவும், 04▶

## ஜனாதிபதி வேட்பாளருக்கான

# ஆதரவு குறித்து கருத்துத் தெரிவிக்க 'மொட்டு' எம்.பிக்களுக்கு வாய்ப்பூட்டு!

**வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து மொட்டுக் கட்சி எம்.பிக்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டதையடுத்து, முறையான முடிவு எடுக்கும் வரை எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் தங்கள் ஆதரவு குறித்து எம்.பிக்கள் கருத்து தெரி விக்கக் கட்சித் தலைமை தடை விதித்துள்ளது.**




நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளருக்கான ஆதரவு விவகாரத்தில் மொட்டுக் கட்சி பிளவுபட்டுள்ளது. அரசில் பதவிகளை வகிப்பவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர். அவர்களில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க மற்றும் அலி சப்ரி ஆகியோர் அடங்கு கின்றனர். மற்றொரு பிரிவினர் சொந்த வேட்பாளரை நிறுத்த வேண்டும்என வலியுறுத்துகின்றனர்.

இதேவேளை, மொட்டுக் கட்சியின் விதிமுறைகளை மீறி, ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் கட்சி தீர்மானித்துள்ளது.



# பாரவூர்தி மீது துப்பாக்கிச் சூடு

## ஒருவர் படுகாயம்

மாத்தறையில் பெலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற பாரவூர்தி மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது பாரவூர்தியில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04▶

# இளைஞருடன் ஹோட்டலுக்கு சென்ற யுவதி சடலமாக மீட்பு!

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மனமேந்து மாவத்தைப் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் அறையில் இருந்து யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதியே சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி யுவதி நேற்று மாலை இளைஞர் ஒருவருடன் குறித்த ஹோட்டலுக்குச் சென்றுள்ள நிலையில், இருவரும் அங்குள்ள அறையொன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது, யுவதி திடீரென மயங்கி விழுந்துள்ளார் என்று அவருடன் தங்கியிருந்த இளைஞர் ஹோட்டல் நிர்வாகத்துக்குத் தெரிவித்துள்ளார். இதனையடுத்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட நிலங்களை பார்வையிட உரிமையாளர்களுக்கு அனுமதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட நிலங்களை உரிமையாளர்கள் இன்று பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் வல்லை – அராலி வீதியில் பலாலி தெற்கு இராணுவச் சோதனை சாவடி ஊடாக அனுமதிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கல் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வசாவிளான் மற்றும் பலாலி தெற்குப் பகுதிகளைச் சேர்ந்த நிலங்களே இன்று பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட 234 ஏக்கர் நிலங்களின் உரிமையாளர்கள் கிராம சேவகர்களிடம் பதிவை மேற்கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நிலங்களைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

33 ஆண்டுகளின் பின்பு தமது நிலங்களைப் பார்வையிட வந்த மக்கள் இராணுவச் சோதனையைச் சாவடியில் அடையாள அட்டை சகிதம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு கால்நடையாக மட்டுமே உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் தமது நிலங்களைப் பார்வையிட ஆவலாக காலை 8 மணிமுதல் காவல் இருந்த பலரில் முதியவர்கள் சிலர் 4 மைல் தூரம் நடந்து பயணிக்க முடியாது எனத் திரும்பிச் சென்றனர்.





# வடமராட்சி பாடசாலையில் நிதி சேகரிப்பு: மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலை ஒன்றில் பாடசாலை அபிவிருத்திக்கென வட்ஸ்அப் குழு மூலம் தொடர்ச்சியாக நிதி சேகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யாழ். வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் பாடசாலை அபிவிருத்திக்கு என வட்ஸ்அப் குழு உருவாக்கப்பட்டு தொடர்ச்சியாக நிதி சேகரிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அந்தப் பாடசாலையின் அதிபரையும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முன்னிலையாகி பாடசாலையில் நிதி




சேகரிப்புதொடர்பில்விளக்கமளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்தப் பாடசாலையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டதாக நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், நிதி சேகரிப்பு குறித்து விசாரணை நடத்துவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மாணவர் வருகையை ஊக்குவிக்க உதவிகள்

(ஹஸ்பர்)

திருகோணமலை வலயத்துக்கு உட்பட்ட திருக்கடலூர் நாமகள் பாடசா லையில் தரம் ஒன்றுக்கான மாண வர்களின் வருகையில் பல வருடங்களாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இதனால் சமூக ஆர்வலர் இராஜ கோன் பிரதீபன் இந்தப் பாடசாலைக்கு ஒவ்வொரு வருடமும் கற்றல் உபகரணங் கள் இலவசமாக வழங்கி வருகிறார்.

அத்துடன் 2023 ஆம் ஆண்டில் இருந்து கல்விக்கான ஊக்குவிப்புத் தொகையாக ஒரு லட்சம் ரூபா வழங்கப் பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் 07 மாணவர்க ளுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா என்ற அடிப்படையில் மொத்தமாக ஏழு லட்சம் ரூபா வங்கி கணக்குகளில் வைப்பிலிடப் பட்டுள்ளது.

இந்த நிதியை வழங்கிய வீ. செல்வராசாவைக்



கௌரவிக்கும் நிகழ்வும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்றுப் (10) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றன.




# புத்தாடை அடங்கிய பொதிகள் றமழானை முன்னிட்டு வழங்கல்

(எம்.ஏ.றமீஸ்)

புனித நோன்புப் பெருநாளை சிறப்பிக்கும் வகையில் 'அனைவரும் பெருநாளைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப் பொருளின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசங் களைச் சேர்ந்தவர்களுக்கு நாபீர் பவுண்டேஷன் மூலம் புத்தாடை அடங் கிய பெருநாள் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டம் நாபீர் பௌண்டேஷனின் தவிசாளர் பொறி யியலாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் தலைமையில் அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

பெருநாள் பொதிகள் சம்மாந்துறை, மாளிகைக்காடு, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய் யப்பட்ட குடும்பத்தவர்களுக்கு வழங் கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வருமானம் குறைந்த பல நூற்றுக் கணக்கான குடும்பத்தவர்களுக்கு இந்தப் பெருநாள் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. புனிதம் மிகு நோன்புப் பெருநாளை அனைவரும் சிறப்புற கொண்டாடும் வகையில் பெறுமதி மிக்க புத்தாடைகள் அடங்கிய பொதிகள் இதன்போது வழங்கப்பட்டன.

இதுதவிர, நிந்தவூர் பிரதேசத்தில் பள்ளிவாசல்களில் கடமை புரியும் மௌலவிமார்கள், முஅத்தின்மார்கள் போன்றோருக்கும் இன்றைய தினம் புத்தாடைகள் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

இந்த நிகழ்வு நிந்தவூர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் கேட்போர் கூடத் தில் இடம்பெற்றது.

இதேவேளை, நாபீர் பௌண்டேஷ னின் மற்றுமொரு உதவும் நிகழ்வான வருமானம் குறைந்த மாணவர்களும் தொழிற் கல்வியை தடையின்றி பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் நிந்தவூர் மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியைத் தொடரும் மாண வர்களுக்குப் பயிற்சி நெறிக் கட்டணம் மாணவர்களுக்கு நாபீர் பௌண்டேஷ னின் தவிசாளரால் வழங்கப்பட்டது.

மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத் தின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ.ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம் கலந்து கொண்டார்.

# பசுத்தோல் போர்த்திய நரியே வேலுகுமார்

## பதிலடி கொடுத்தது இ.தொ.கா.




இதுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பைசா கூட சம்பளம் பெற்றுக் கொடுக்காமல் சந்தா மாத்திரம் பெற்றுக் கொண்டு இருக்கின்ற ஜனநாயக மக்கள் முன்னணி கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சம்பள உயர்வை பற்றி விமர்சிப்பது என்பது பசுத்தோல் போர்த்திய நரி போல் உள்ளது என்று முன்னாள் அமைச்சரும் இ.தொ.காவின் போசகருமான ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கக்கூடாது என்று சம்பளப் பேச்சுக்குச் செல்லாத கம்பனிகளை விமர்சனம் செய்யாமல், இ.தொ.கா. சம்பளப் பேச்சுக்குச் செல்லாதது போல் இ.தொ.காவை விமர்சிப்பது என்பது இவர் ஒரு மனநோயாளி போல் காணக்கூடியதாக உள்ளது.

வேலுகுமார் அரசியலுக்கு வந்து கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேலாகியுள்ளது. ஒரு தொழிற்சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இவர் தோட்டத் தொழிலாளர்களுக்காக இதுவரை 10 பைசா கூட சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்தது இல்லை என்பதை நினைக்கும்போது இவருக்கு வாக்களித்த மக்களை எண்ணி வேதனை அடைகின்றேன்.

2015 முதல் 2019 வரை வேலுகுமார் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், அரசில் எந்த அமைச்சு பதவிகளும் வேலுகுமாருக்கு வழங்கப்படவில்லை. எதிர்க்கட்சியில் இருந்தபோது அமைச்சுப் பதவிக்கு ஆசைப்பட்டு தனது கட்சியின் கொள்கையை மீறி அரசுக்கு ஆதரவாக வாக்களித்தும் அவருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. அவருடைய தகுதி ஆராயப்பட்டே அவருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படவில்லை என்பதை இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேலுகுமார் பல முறை ஜானதிபதியை இரகசியமாகச் சந்தித்து , தனது ஆசையை நிறைவேற்ற முயற்சித்த போதிலும் அது பயனளிக்கவில்லை என்பதால், இ.தொ.கா. அரசில் பதவி வகிப்பதைக் கண்டு மன விரக்தியில் குழப்பிக் கொண்டிருக்கின்றார்.

தோட்டத் தொழிலாளர்களிடம் சந்தாவைப் பெற்றுக் கொண்டு, 10 பைசா கூட சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்காத கட்சிதான் வேலுகுமார் பிரதிநிதித்துவப் படுத்தும் ஜனநாயக மக்கள் முன்னணி. இதை மூடி மறைத்து விட்டு அன்று முதல் இன்று வரை இ.தொ. கா. பெற்றுக்கொடுத்த சம்பளத்தில் அவர் சந்தா பெற்றுக்கொள்கின்றார்.

இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானின் முயற்சியால் பல தொழிற்சங்கப் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதேபோல் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானின் தொடர்ச்சியான சம்பள உயர்வு தொடர்பான ஊடக சந்திப்புகளின்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் நியாமான சம்பள உயர்வு கிடைக்கும் எனவும், அதற்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக்கொள்வதாகவும், அதற்கான அனைத்து வேலைத்திட்டத்தை அன்று முதல் இன்று வரை அவர் செய்து வருகிறார்.

மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் தலைமையிலான சம்பளப் பேச்சுகளின் போது அவருடைய பின்புலத்தில் இருந்த உயர்மட்ட குழுவில் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் இராமேஸ்வரன் ஆகியோரும் அங்கம் வகித்தனர். ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பிறகு அதே நிதானத்துடன் செயற்படுவதோடு சம்பளம் பெற்றுக்கொடுப்பதில் பின்வாங்காமல் செயற்படுகின்றார். அவருடைய அரசியல் அனுபவத்தின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவாக சம்பளம் பெற்று கொடுப்பர் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

இ.தொ.கா. பொதுச் செயலாளர்

**(05ஆம் பக்கம் பார்க்க)**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எந்தச்..

மொட்டு, யானை மற்றும் அன்னம் ஆகிய சின்னங்கள் இல்லாமல் பொதுச் சின்னத்தில் அவர் களமிறங்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுச் சின்னமாக இருந்தால் ஜனாதிபதியை ஆதரிக்க பல தரப்புகளும் முன்வந்துள்ளதால் தற்போது அந்தச் சின்னம் பற்றி ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.

சின்னம் மற்றும் கூட்டணியின் பெயர் என்பன உள்ளிட்ட விவகாரங்களைக் கையாள்வதற்கான ஆலோசனைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

### ஹெரோயினுடன்...

னார் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மாளிகாவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அந்த நபரிடமிருந்து 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும், ஹெரோயினும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருளைக் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதிக்கு எடுத்துச் செல்கையிலேயே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் என்பதுடன், டுபாயில் தற்போது தலைமறைவாகியுள்ள 'கெசல்வத்த தினுக' என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவரின் உதவியாளர் எனவும் தெரியவந்துள்ளது.

### பாரவூர்தி...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கனங்கே ரஜமஹா விகாரைக்கு அருகில் மாடுகளை ஏற்றிச் செல்வதை அவதானித்த இரவு நேரக் கண்காணிப்பு பொலிஸ் குழுவொன்று, பாரவூர்தியை தொலேலியத்த பிரதேசத்தில் நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

இருப்பினும், உத்தரவை மீறித் தொடர்ந்து பயணித்ததால், இன்று அதிகாலை 4.30 மணியளவில் மாடுகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி மீது மாத்தறை, கனங்கே, தொலேலியத்த பகுதியில் வைத்து பொலிஸார் துப்பாக் கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இதன்போதே பாரவூர்தியில் இருந்த ஒருவர் படுகாயம் அடைந்ததுடன் மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

கிங்தோட்டை, மாபுகல பகுதியைச் சேர்ந்த நபரே துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளார்.

சந்தேகநபர் தற்போது சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியாவில் பல்வேறு உதவி!

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வவுனியாவில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவில் புளியங்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஸ்ரீ முத்து மாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 70 மாணவர்களுக்கு, சீருடைகள் வழங்கப்பட்டன. மாதாந்தம் சத்துணவுகளுக்கான நிதியாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

கணேசபுரம் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 65 மாணவர்களுக்குச் சீருடைகளும், மாதாந்த சத்துணவுகளுக்காகப் 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த அறநெறி பாடசாலைக்குக் கட்டடம் அமைப்பதற்கான முதலாம் கட்ட நிதியாக 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இதேவேளை கணேசபுரத்திலுள்ள திருமூலர் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 60 மாணவர்களுக்கு மாதாந்தம் சத்துணவுக்காகப் 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா கூமாங்குளம் கிராமத்தை சேர்ந்த விசேட தேவைக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீட்டின் கூரை திருத்தத்துக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் சமூக செயற்பாட்டாளர் இ. தயாபரன், செட்டிக்குளம் கலாச்சார உத்தியோகத்தர் சி.கயேந்திரகுமார், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர் ம.சுஜேந்நிரன் ஆகியோருர் வழங்கினர். சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அறநெறி பாடசாலைகளின் நிர்வாகிகள், அறநெறி பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பசுத்தோல் போர்த்திய நரியே வேலுகுமார்

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவன் தொண்டமான் அவர்கள் சம்பளம் அதிகரிக்க வேண்டும் என்பதில் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றார். சம்பள நிர்ணய சபை கூடும் திகதியை அடிப்படையாக வைத்து 30 நாட்களுக்குள் சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் சம்பள உயர்வு பெற்றுத் தரப்படும் எனத் தெரிவித்திருந்தார். தற்போது அது 10 அல்லது 20 நாட்களுக்கு தள்ளிப்போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்தது ஒன்றும் உலக மகா குற்றம் கிடையாது.

அவ்வாறு இருக்கும் நிலையில், கடந்த காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 சம்பளம் பெற்றுக கொடுக்க வேண்டும் என இ.தொ.கா. எதிர்க்கட்சியில் இருந்து போராடிக் கொண்டிருக்கும்போது, வேலுகுமார் ஆளும் கட்சியில் 5 வருடம் இருந்து 10 பைசா கூட சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கவில்லை என்பது ஊர் அறிந்த உண்மை.

நான் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருடன் பல கூட்டு ஒப்பந்தத்தில், சம்பளப் பேச்சில் கலந்துகொண்டுள்ளேன். இ.தொ.கா. ஒவ்வொரு சம்பளப் பேச்சின் போதும் கடுமையான வாக்குவாதம், போராட்டம் செய்தே சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்துள்ளது.

இ.தொ.காவைப் பொறுத்த மட்டில் ஆறுமுகன் தொண்டமான் மறைந்த போதிலும் அவர் முன்வைத்த 1000 ரூபாவை இ.தொ.கா. பெற்றுகொடுத்தது. அதேபோல் தற்போது இ.தொ.கா. முன்வைத்த கோரிக்கையை இ.தொ.கா. பெற்றுக்கொடுக்கும்.

வேலுகுமார் பெருந்தோட்டக் கம்பனிகளின் தரகராகச் செயற்பட்டு, அதிக சம்பளம் தராத கம்பனிகளின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பை இ.தொ.கா. மீது திசை திருப்ப முயற்சிக்கின்றார். வேலுகுமார், கம்பனிகளுக்கு எதிராக எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை. இதன்மூலம் இவர் கம்பனிகளின் கைகூலியாகச் செயற்படுவதை அவருடைய அறிக்கையில் வெட்டவெளிச்சமாக காண முடிகின்றது.

கம்பனிகளுக்கு மறைமுகமாக கைக்கூலி வேலைப்பார்த்து கொண்டிருக்கும் வேலுகுமாருக்கு இந்தப் பதில் போதுமானது என நினைக்கின்றேன். பசுத்தோல் போர்த்திய நரியான 10 பைசா வேலுகுமார் தன்னை நியாயமானவராக இனி வரும் காலநகளில் வெளிக்காட்டக் கம்பனிக்கு எதிராக இனி அறிக்கை வெளியிடுவார்.

வேலுகுமாரின் போலி நாடகம் இனி அரங்கேறாது எனத் தெரிவித்துள்ளதோடு, என்னுடைய அரசியல் அனுபவத்தில் பாதியே வேலுகுமாரின் வயது. இவரைப் போல் பல கம்பனிகளின் கைகூலிகளை எனது வாழ்நாளில் சந்தித்துள்ளேன். வெறும் செயல் இன்றி வாயாலே தனது வாழ்க்கையை அவர்கள் ஓட்டிவிடுவார்கள்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விக்னேஸ்வரனின் பேராசை

'சோழியன் குடுமி சும்மா ஆடுவ தில்லை!' - பெரும்பாலும் தமிழ் அரசியல் வாதிகள் விடயத்தில் இது சரியான கூற்றுதான்.

அதுவும் நமது நீதியரசர் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இது முற்றிலும் சரி போன்றே தோன்றுகின்றது.

இலங்கை அரசின் சட்ட திட்டங்களை - நீதி முறைகளை - வழுவாமல், ஒழுங்காக நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் வாழ்க்கை முழுவதும் சம்பளம், பின்னர் ஓய்வூதியம் மற்றும் பிற வசதிகள், சொகுசுகளை சுவீகரித்துக் கொண்டவர் நீதியரசர் விக்னேஸ்வரன். பிறகு, தமிழர் தலையில் மிளகாய் அரைத்து, ஓய்வு கால அரசியலை - அதுவும் வெறுமனே அறிக் கைப் போர் அரசியலை - வெற்றிகரமாக முன்னெடுப்பவர்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம் பந்தனின் கடைக்கண் பார்வை விழுந்த மையால் வடக்கு மாகாண முதலமைச் சரானார். பின்னர் சம்பந்தனையும், கூட்டமைப்பையும் திட்டித் தீர்த்து, அதன் மூலமே எம்.பியாகிவிட்டார். இப்போது எம்.பியாக இருந்து கொண்டு - அதை விட்டு விடாமலேயே - தமிழ் மக்களின் பொது வேட்பாளர் என்ற அந்தஸ்தையும் பெற்று விடத் துடியாய்த் துடிக்கின்றார்.

அதனால்தான் தம்மை அரசியலுக்கு கூட்டி வந்து, மேலே உயர்த்தி விட்ட சம்பந்தனை, அவரின் இயலுமையற்ற இந்தக் காலத்தில் கீழ்மைத்தனமாக விமர்சித்து, அரசியல் சகுனித்தனம் பண்ணுகிறார் விக்னேஸ்வரன்.

''தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத் தப்படுவதற்கு நானே பொருத்தமானவன் - சிறந்த வேட்பாளன் - எனக் கருதுகிறேன்'' என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார் என ஆங்கில நாளிதழ் ஒன்று இன்று செய்தி பிரசுரித்திருக்கின்றது.

ஆக, பொது வேட்பாளர் நிறுத்துவது தொடர்பான வலியுறுத்தல் ஏன் - சோழியன் குடுமி ஆடுவது ஏன் - என்பது புலனாகத் தொடங்கிவிட்டது.

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக வும், தமிழ்த் தேசியத்தை ஆதரித்து, உயர்த்தியும் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டால், தமிழ் மக்கள் மத்தியில் வெற்றிகரமாக அரசியல் செய்து, பதவி களை தக்க வைத்து, சொகுசில் தொடரலாம் என்ற தந்திரம்தான் அவரது செயற்பாடாக எஞ்சிக் கிடக்கின்றது.

''இலங்கையில் இருப்பது சிங்கள வர்களால், சிங்களர்களுக்கு என அமைக் கப்பட்ட சிங்கள அரசாங்கம்'' - என்றும் இப்போது அவர் கூறியிருக்கிறார்.

இத்தகைய கருத்து வெளியிடும் போக்கு தமிழ்த் தேசிய அரசியலில் தம்மை ஒரு பெரும் புள்ளியாக தொடர்ந்து வைத்தி ருப்பதற்கு போதுமானது என்பதுதான் அவரின் அரசியல் கணிப்பீடு போலும்.

இப்போது தாம் விடும் அரசியல் கயிறுகள் தமிழ் மக்கள் மத்தியில் வெளுத்து வருகின்றன என்பதை புரிந்து கொண்டுள்ள நீதியரசருக்கு அடுத்து வரக்கூடிய பொதுத் தேர்தலில், தமது தமிழ்த் தேசியம் பேசும் சாயம் முற்றாக வெளுத்து விடும், அடுத்த முறை மக்கள் பிரதிநிதியாகும் வாய்ப்பு பெரும்பாலும் துர்லபம்தான் என்பது நன்கு புரிய தொடங்கி விட்டது என்றே தோன்றுகிறது.

ஆகவே, அதற்கு முதல் நடக்கக்கூடிய ஜனாதிபதித் தேர்தல் மூலம் தமிழ் மக்களின் பொது வேட்பாளராக - தமிழ்த் தேசத்தின் பிரதிநிதியாக - தம்மை உயர்த்திக் காட்டி நிலை நிறுத்தி விடும் அரசியல் ஆசையில் மனப்பால் குடிக்கின் றார் நீதியரசர்.

அதன் முயற்சிதான் பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவுக்கு ஆலாய்ப் பறக்கும் அவரின் எத்தனம்.

ஏற்கனவே, 'பொது வேட்பாளராக நிற்கும்படி கேட்டால் அதனை ஏற்பேன்' என்று கூறியவர் அவர். இப்போது தானே பொது வேட்பாளர் நிலைக்குப் பொருத் தமானவன் என்று அவரே கூறி இருக்கும் செய்தி வெளியாகி, அவரது நப்பாசையை - வேணவாவை - பேராசையை - வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்துவதற்காகத் தொடர்ந்து போராடும் நமது தீவிரத்தில் ஓர் அமிலச் சோதனை. அதில் சுயநலவாதிகளின் நோக்கங்களுக்கு - இலக்குகளுக்கு - இடம் கொடுத்து, அவற்றின் அடிப்படையில் தீர்மானம் எடுத்து, கால் தவறி விட்டால் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்துவதற்கான போராட்டமே அடிப்ப டையற்று, அர்த்தமற்றுப் போய்விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.






# புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இலவசமாக கற்றல் உபகரணம்

(வி.ரி.சகாதேவராஜா)

புத்தாண்டை முன்னிட்டு இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள மண்டூர் 35, கண்ணன் பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 52 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு பாட சாலையின் அதிபர் தெ.பேரின்பராசா தலைமையில் இடம்பெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்க கூடாது என்று எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம் எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங் கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றது.

மேலும் இந் நிகழ்வில் ஆசிரியர் களான ந. நவகுமார், திருமதி. கி. விலோஜினி மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்க ளான, ஏ.எம்.ரிஸ்வான், சி.காந்தன், சி. துலக்சன் ஆகியோர் கலந்து கொண்டு 52 மாணவர்களுக்குக் கற்றல் உப கரணங்கள் மற்றும் தண்ணீர் போத் தல்கள் என்பவற்றை வழங்கி னர்.





# கதிரவெளியில் இரத்ததானம்!






(பழுவூரான்)

கதிரவெளி பிரதேச வைத்தியசாலை யின் ஏற்பாட்டில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி ஜோசப் பீற்றர் நிரோஜனின் ஒழுங்குபடுத்து தலின் கீழ் பிரதேச வைத்திய சாலையில் நேற்று புதன்கிழமை (10) இரத்ததான முகாம் ஒன்று முன்னெடுக்கப்பட் டது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியில் ஏற்பட் டுள்ள இரத்தப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு "உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில் இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

இந்த இரத்ததான முகாமில், மட்டக் களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஏராளமான பிரதேச வாழ் பொதுமக்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு ஆர்வத்துடன் குருதிக் கொடை வழங்கினர்.



# மண் அகழ்வுக்கு அனுமதி பத்திரங்கள் அரச அதிபர் தலைமையில் ஆராய்வு!

## விசேட கலந்துரையாடலில் தீர்மானம்

(மன்னார்)

மண் அகழ்வுக்கு அனுமதி பத்திரங்கள் அனைத்தும் அரச அதிபர் தலைமையில் உள்ள குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டதன் பின்னர் மண் அகழ்வு செய்ய அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு சம்பந்தமான விசேட கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை (10) மாலை மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான அமைப்புகளின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் மற்றும் பிரஜைகள் குழுவின் தலைவர், கடற்படையினர், பொலிஸார் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சட்டபூர்வமான மற்றும் சட்ட விரோதமான மணல் அகழ்வு சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கும் மணல் அகழ்வு அனுமதி பத்திரங்கள் சிலவற்றை தற்காலிகமாக இடை நிறுத்துவது என்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களை கள விஜயம் மேற்கொண்டதன் பின்னர் அனுமதி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான மண்அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் இந்தச் சட்டவிரோத மண் அகழ்வு மக்களுக்கு பாரிய இடையூறாக இருப்பதாகவும் பொது மக்களின் குற்றசாட்டுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதேநேரம் வெளி மாவட்டங்களில் இருந்து தனி நபர்களால் மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மண் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது என்றும் இதனைத் தடுப்பதற்காகச் சில திணைக்களங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதாகவும் அத்தோடு அவர்களுக்கான அனுமதிபத்திரங்களை உடனடியாக ரத்து செய்வதாகவும் மாவட்ட அரச அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு வேறு திணைக்களங்களால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் உள்ள குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டதன் பின்னரே அவ்விடங்களில் அனுமதி வழங்க முடியும் எனவும் அரச அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

மண் அகழ்வு போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வேறு மாவட்டத்தில் இருந்து வழங்கும் போது ஏ 32 பாதையில் அனுமத்திரம் வழங்க முடியாது எனவும் இவ்வாறு வழங்குவதால் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோத மண் அகழ்வை தடுப்பதற்குப் பொலிஸார் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்களமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# இன நல்லிணக்கத்துக்கு எடுத்துக் காட்டாக மட்டக்களப்பில் நடந்த இப்தார் நிகழ்வுகள்!

## மட்டு. அரச அதிபர் சுட்டிக்காட்டு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இன நல்லிணக்கத்துக்கு எடுத்துக் காட்டாக பல இப்தார் நிகழ்வுகள் இம்முறை மட்டக்களப்பில் இடம்பெற்றன என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிலிருந்து மீண்டு இவ்வருடம் முஸ்லிம் மக்கள் அவர்களுடைய ஐந்து கடமைகளில் முக்கியமான நோன்பை நோற்று இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் இனநல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக பல இப்தார் நிகழ்வுகளையும் நடத்தியிருந்தனர்.

அதேவேளை நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகல முஸ்லிம்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் நோன்புப் பெருநாளுக்கு வாழ்த்துத் தெரிவிக்குமுகமாக ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




# போதைப் பொருள் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வழங்கி வைப்பு!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர் தொடர்பான துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு நகர் பகுதியில் போதைப் பொருள் தடுப்பு துண்டுப்பிரசுரம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண புனர்வாழ்வு பொறுப்பதிகாரி கேணல் சனத் அபே திலக்க தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண புனர்வாழ்வு நிலையம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நேற்று (10) இடம்பெற்றது.

போதையற்ற நாடு சௌபாக்கியமான தேசம் எனும் தொனிப்பொருளில் பாதசாரிகளுக்குத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் வீதியில் செல்லும் வாகனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

போதைப்பொருள் தடுப்பு நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ப.தினேஸ், புனர்வாழ்வுப் பணியக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர் வி.ஜெகன் எனப் பலர் பங்குபற்றினர்.

# பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக சீருடைகள் வழங்கல்






(தலவாக்கலை)

பாடசாலை மாணவர்களுக்கான மேலதிக சீருடைகள் வழங்கும் நிகழ்வு நேற்று (10) புதன்கிழமை நுவரெலியா பரிசுத்த திருத்துவ ஆரம்ப கல்லூரியில் நடைப்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு சீருடைகளை வழங்கி வைத்தார்.

இங்கு நுவரெலியா கல்வி வலய கோட்டம் ஒன்றின் பாடசாலைகளுக்கு இந்த இலவச சீருடைகள் வழங்கப்பட்டன. இதன்போது நுவரெலியா கோட்டம் ஒன்றின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கணேசன் மற்றும் நுவரெலியா கோட்டம் ஒன்றின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்துக்கொண்டனர்.




# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு கட்டைபறிச்சானில் சிறப்பு நிகழ்வு

## ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர்

**(ஹஸ்பர்)**

மூதூர் கிழக்கு, கட்டைபறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டுக் கழகத்தால் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளில் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது முதல் நிகழ்வாக பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

முதன்மை அதிதியாக கலந்து சிறப்பித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தமிழர் கலாச்சார நடனங்களுடன் அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது. இதன்போது வரவேற்பு நடனம் வலைப்பந்தாட்ட போட்டி என்பன இடம் பெற்றன.

அதைவிட கிழக்கு மாகாண ஆளுநரின் சேவையைப் பாராட்டி ஏற்பாட்டு குழுவினரால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. பொன்னாடை போர்த்தியும் ஆளுநர் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் ஏனைய அதிதிகளாக மூதூர் பிரதேச செயலாளர், பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கட்டைபறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டு கழகத்தால் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மரதன் ஓட்டம், படகோட்டம், வழுக்கு மரம் ஏறுதல், கயிறிழுத்தல், சைக்கிளோட்டம், சங்கீதக் கதிரை, முட்டியுடைத்தல், பலூனுடைத்தல், மிட்டாய் உண்ணுதல், சங்கீதக் கதிரை, நீச்சல் உள்ளிட்ட பல விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன.









# கல்வியால் நாடு அபிவிருத்தியடைந்தால் இன, மதப் பிரச்சினைகள் தலைதூக்காது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கல்வியின் மூலம் ஒரு நாடு அபிவிருத்தியடையும் போது இன, மதப் பிரச்சினைகள் தலைதூக்காது. ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் கல்வி மிகவும் முக்கியமானது என்பதால், ஐக்கிய மக்கள் சக்தி தற்போது நாட்டில் கல்வி வலுவூட்டலை மேற்கொண்டு வருகிறது.

அறிவுத்துறையை மையமாகக் கொண்ட சிறந்த திறன்களைக் கொண்ட திறமையாளர்களைக் கொண்ட பெரும் தொழிலாளர் வளத்தைக் கொண்ட மையமாக நமது நாடு மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 149 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், புத்தளம், ஆனமடுவ, நவகத்தேகம, கெலேவெவ விஜய மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கல்லூரியின் நடனம், வாத்தியம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஒரு லட்சம் ரூபா நிதியையும் நன்கொடையாக வழங்கினார்.

இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

கல்வியின் மூலம் உருவாகும் அறிவாற்றலில் இருந்து உயர்வாகச் சிந்திக்க ஒவ்வொருவரும் முனைய வேண்டும். சிந்தனை ஆற்றலே புதிய விடயங்களுக்கு வழிவகுக்கும். நல்ல அறிவாற்றல் வாய்ந்த பெரும்பாலானோர் இனவாதம் மற்றும் மத வாதத்தைப் பரப்புவதில்லை. அது போலவே துணைபோவதும் இல்லை.

அரசியலமைப்புச் சட்டம் 'ஒருமித்த' என்று குறிப்பிடப்பட்டாலும், நாட்டில் பல்வேறு மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் பிளவுகள் இருந்தால், இங்கு ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை. அந்த ஒருமைப்பாடு யதார்த்தமாக்கப்பட வேண்டும். தேசிய ஒற்றுமை, ஒன்றிணைவு மற்றும் சகோதரத்துவம் ஆகியவை ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகப்பெரிய அடித்தளத்தைச் சேர்க்கின்றன. ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்குக் கல்வி பாரிய உறுதுணையாக அமைந்துள்ளது.

கல்வியில் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. தவிர்க்க முடியாமல் அந்த ஏற்றத்தாழ்வுக்குக் காரணமாகப் பாடசாலைகளில் பல்வேறு குறைபாடுகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறைகள் நிலவிவருகின்றன. முன்னணி பிரபல மற்றும் தேசிய பாடசாலைகளில் குறைபாடுகள் குறைவு என்றாலும் இந்த ஏற்றத்தாழ்வுகள் களையப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் 20 லட்சம் ரூபா செலவிடப்பட்டு தேசியப் பாடசாலை எனப் பெயர் பலகைகள் பதிக்கப்பட்டன. சில பிரதேசங்களில் முறையான தேசிய பாடசாலைகள் கூட இல்லை. இந்த 20 லட்சம் ரூபா பெயர் பலகைக்குப் பதிலாக 2 ஸ்மாரட் வகுப்பறைகளை பாடசாலைக்கு வழங்கியிருக்கலாம்.

வங்குரோத்தான நாட்டில் பணமும் வளங்களும் குறைவாக இருப்பதால், நாம் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு, குறைந்த வளங்களைக் கொண்ட நாட்டில் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் மிக முக்கியமான பரப்புகளைக் கண்டறிந்து நிதியை ஒதுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி இதனை சரியாக அடையாளம் கண்டுள்ளது. நாட்டின் தேசிய நிகழ்ச்சி நிரலில் கல்வியும் சுகாதாரமும் முதன்மை பெற வேண்டும்.

நாடு முழுவதும் யானை-மனித மோதல் உள்ளது. சுற்றுச்சூழல் ஆர்வலராகவும் மக்கள் சார் அரசியல்வாதி என்ற வகையிலும், தேசிய நில பயன்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதே இந்த மோதலுக்கான சிறந்த தீர்வாகும் என கருதுகிறேன். இதன் மூலம் காட்டு யானைகள் இருக்கும் இடங்கள் மற்றும் மக்கள் வசிப்பிடங்களை துல்லியமாக கண்டறிய முடியும். மின்சார வேலிகள் மற்றும் பள்ளங்களை முறையாக நிர்வகிப்பதன் மூலம் இந்த மோதலைச் சமாளிக்க முடியும்.

வனவிலங்குகளை மையமாகக் கொண்ட சுற்றுலாத் தொழில் ஆரம்பிக்கப்பட வேண்டும். தப்போவ சரணாலயம் உருவாக்கப்பட்ட போதிலும் அங்கு சுற்றுலாப் பயணிகள் எவரும் விஜயங்களை மேற்கொள்வதில்லை. எனவே எதிர்காலத்தில் பசுமையை மையமாகக் கொண்ட சுற்றுலாத்துறையை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.- என்றார்.








# லண்டனில் ‘தமிழ் நிலைய மாலை’

இலண்டனில் இயங்கி வரும் தனித்துவமான பாடசாலைகளில் ஒன்றான லண்டன் தமிழ் நிலையப் பாடசாலையின் வருடாந்த ‘தமிழ் நிலைய மாலை’ நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (07) watersmeet theatre இல் இடம்பெற்றது.

வாத்தியக்கதம்பம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், சுரத்தட்டு, பரதநாட்டியம், கவிதாநிகழ்வு ஆகிய நிகழ்வுகள் பாடசாலை ஆசிரியர்களின் கடுமையான உழைப்புடன் மேடையேறின.

வீணை ஆசிரியைகளான ஸ்ரீமதி சிவதாரணி சகாதேவன், செல்வி ஜெசிக்கா நித்தியானந்தா, வாய்ப்பாட்டு ஆசிரியைகளான ஸ்ரீமதி சயனி தியாகநாதன், ஸ்ரீமதி ஜெயந்தி சுரேஸ், ஸ்ரீமதி திலகசக்தி ஆராவமுதன், மிருதங்க ஆசிரியர்களான ஸ்ரீ கிருபாகரன் பரமசாமி, ஸ்ரீபார்த்தீபன் செல்வரட்ணம், வயலின் ஆசிரியையான ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கம், புல்லாங்குழல் ஆசிரியரான ஸ்ரீ ஜனகன் ஸ்ரீஸ்கந்தராஜா, சுரத்தட்டு ஆசிரியர்களான ஸ்ரீரெஜித்தன் சிவனேசன், ஸ்ரீநிருஜன் சிவனேசன், பரதநாட்டிய ஆசிரியைகளான ஸ்ரீமதி திரிவேணி சங்கரகுமார், ஸ்ரீமதி பிரசாந்தி உதயபாபு ஆகியோரின் பங்களிப்பு இதில் இடம்பெற்றது.



மாணவர்கள் வழங்கிய தெய்வீக இசையும் நடனமும் பாடசாலையின் தரத்தையும் உயர்த்தியனவாக இருந்தன. நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் பக்கவாத்தியக் கலைஞர்களாக விளங்கி ஒத்துழைப்பு வழங்கியமையும் மிகச் சிறப்பான அம்சமாக விளங்கியது.

கலாக்ஷேத்திராவில் கல்வி கற்ற ஆசிரியைகளால் கற்பிக்கப்படும் பரத நாட்டிய நிகழ்ச்சி எப்போதும் லண்டன் தமிழ்ப் பாடசாலையில் தனித்துவமுடையதாக அமைந்திருக்கும்.

இந்த முறையும் சீத்தா கல்யாணம் பொம்மலாட்ட நடன அமைப்பில் சிறுவர்களால் திறன்பட ஆடப்பட்டது. தொடர்ந்து சிரேஷ்ட மணவர்களது பரதநாட்டியமும், அவர்களது நளினமும் அடவு முத்திரைகளும் சுத்தமானதாக இருந்து சபையைக் கவர்ந்தன. வாய்ப்பாட்டு ஆசிரியை ஸ்ரீமதி ஜெயந்தி சுரேஸின் வாய்ப்பாட்டும் இடம்பெற்றது.

தமிழ் மொழியின் புகழைச் சொல்லும் வகையில் ’சித்திரம் பேசுதடி’ கவிதா நிகழ்வு நகைச்சுவையுடன் இடம்பெற்றது. இதற்கான பிரதியை பாடசாலையின் பெற்றோரான கவிஞர் சு. திருப்பரங்குன்றன் எழுதியமை குறிப்பித்தக்கது.

தமிழ் ஆசிரியைகளான ஸ்ரீமதி காஞ்சனா புவனேந்திரன், ஸ்ரீமதி ராதா நவனீதநாதன், ஸ்ரீமதி அகல்யா நித்தியலிங்கம், ஸ்ரீமதி மாதவி சிவலீலன் ஆகியோர் இதனை நெறிப்படுத்தினர்.














# பள்ளி பஸ் விபத்தில் ஆறு மாணவர்கள் பலி

## 20 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில்

சண்டிகர்,ஏப்.11

அரியானாவில் பள்ளி பஸ் விபத்தில் சிக்கி மரத்தில் மோதியதில் 6 மாணவர்கள் உயிரிழந்தனர்.இருபது மாணவர்கள் வரைப் படுகாயமடைந்தனர்.

அரியானா மாநிலம் மகேந்திர கர்க் மாவட்டம் நர்னால் பகுதியில் உள்ள தனியார் பள்ளிக்குச் சொந்தமான பஸ் ஒன்று மாணவர்களை ஏற்றிக்கொண்டு இன்று காலை பள்ளிக்கு சென்று கொண்டிருந்தது. அதில் 4 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் 30-க்கும் மேற்பட்டோர் இருந்தனர்.

பள்ளி பஸ் உன்ஹானி கிராமத்தில் சென்ற போது விபத்தில் சிக்கியது. மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற போது திடீரென்று தாறுமாறாக ஓடிய பஸ், அங்குள்ள மரத்தில் மோதிக் கவிழ்ந்தது.

இதில் பஸ்ஸில் இருந்த பள்ளி மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். உடனே கிராம மக்கள், பொலிஸார் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்த மாணவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் 6 மாணவர்கள் பலியானார்கள். 20-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட கல்வி அலுவலர் கூறும்போது, முதற்கட்ட விசாரணையில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் மரத்தில் மோதியுள்ளது, டிரைவர் குடிபோதையில் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது என்றார்.

விடுமுறை நாளான இன்று பள்ளி இயங்கி உள்ளது. மேலும் விபத்துக்குள்ளான பள்ளி பஸ் தகுதி சான்றிதழ் 6 ஆண்டுகளுக்கு முன்பே காலாவதியாகி விட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.





# பாம்பன் பகுதியில் கடல் 200 மீற்றர் உள்வாங்கியது




பாம்பன்,ஏப்11

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியில் கடல் திடீரென 200 மீற்றர் வரை உள்வாங்கி காணப்பட்டது.

திருச்செந்தூர், கன்னியாகுமரி, ராமேஸ்வரம் போன்ற கடற்கரை பகுதிகளில் கடல் உள்வாங்கும் சம்பவங்கள் நடக்கின்றன. குறிப்பாக அமாவாசை மற்றும் பௌர்ணமி நாள்களில் கடல் உள்வாங்கி காணப்படும். சிறிது நேரத்தில் இயல்புநிலைக்கு திரும்பிவிடும்.

இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியில் கடல் திடீரென 200 மீற்றர் வரை உள்வாங்கி காணப்பட்டது. கடல் உள்வாங்கியதால் நாட்டுப்படகுகள் தரை தட்டி நிற்கின்றன. காலநிலை மாற்றத்தால் கடல் உள்வாங் கியுள்ளதாக மத்திய கடல் மீன்வளம் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சிறிது நேரத்தில் கடல் இயல்பு நிலைக்கு திரும் பும் எனவும், மீனவர்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.



# சோழர் கால கல்வெட்டுகள் தஞ்சாவூரில் கண்டுபிடிப்பு

தஞ்சாவூர்,ஏப்.11

தஞ்சை அருகே 1000 ஆண்டுகள் பழமையான சோழர் கால கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் ராஜகிரியை சேர்ந்த தர்மராஜ் வயலில் உள்ள ஒரு கல்லில் எழுத்துகள் காணப்படுவதாக அவ்வூரை சார்ந்த ராமபாரதி, விக்னேஷ்வரன் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் தகவல் கொடுத்தனர். அதன்பேரில் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக தமிழ் பண்டிதரும், வரலாற்று ஆய்வாளருமான மணிமாறன் மற்றும் பொந்தியாகுளம் அரசு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் தில்லை கோவிந்தராஜன் ஆகியோர் கள ஆய்வு செய்தனர். அப்போது பாபநாசத்தின் தெற்கே குடமுருட்டி ஆற்றுக்கும், வடக்கே அரசலாற்றுக்கும் இடையே அமைந்துள்ள அரையபுரம் தட்டாங்கல் படுகையில் கால்வாயை ஒட்டி நான்கு துண்டு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

இது குறித்து வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகையில், இக்கல் வெட்டுகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சோழர் கால எழுத்தமை தியுடன் காணப்படுகின் றன. நான்கு துண்டு கல்வெட்டுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாகக் காணப்படுவ தோடு முழுமையாகவும் இல்லை. கல்வெட்டு காணப்படும் இடத் திலிருந்து சில மீட்டர் தொலைவில் சோழர் காலத்தைய கோயில் ஒன்று முற்றிலுமாகச் சிதைவடைந்து அழிந் திருக்க வேண்டும். அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்தவையாக இத் துண்டு கல்வெட்டுகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது



# ஹமாஸ் தலைவரின் மூன்று மகன்மார் இஸ்ரேலின் வான் தாக்குதலில் சாவு!

காசாவில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹானியேவின் மகன்கள் ஹாசேம், ஆமீர் மற்றும் முகமது ஆகிய 3 பேர் கொல்லப்பட்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹானியே உறுதி செய்துள்ளார். இது குறித்து தனியார் செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்துள்ள பேட்டியில், பாலஸ்தீன தலைவர்களின் குடும்பத்தினரை இஸ்ரேல் ராணுவம் குறிவைத்து தாக்கினாலும் அவர்கள் ஒருபோதும் பின்வாங்கமாட்டார்கள் என்றும், இந்த படுகொலைகளால் போர் நிறுத்த பேச்சுவார்த்தையின்போது ஹமாஸ் அமைப்பின் கோரிக்கைகளில் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

டந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 240 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது. இந்த தாக்குதலை தொடர்ந்து காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் போர் அறிவித்தது

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 33,482 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 76,049 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காசா மக்களுக்கான உணவு விநியோகத்தை இஸ்ரேல் ராணுவம் தடுத்து வருவதால், காசாவில் ரமலான் பண்டிகை கொண்டாட்டங்கள் முடங்கியுள்ளன.

# யூரல் மலைப்பகுதியில் வேகமாக உருகும் பனி ரஷ்யா, கஜகஸ்தானில் கடும் வெள்ளப்பெருக்கு

**மொஸ்கோ,ஏப்.11**

ரஷ்யா மற்றும் அண்டை நாடான கஜகஸ்தானில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவின் தெற்கு யூரல் மலைப்பகுதி, மேற்கு சைபீரியா மற்றும் வடக்கு கஜகஸ்தானில் உள்ள மலைப்பகுதிகளில் பனிப்பொழிவு மற்றும் பனிக்கட்டிகள் வேகமாக உருகுவதால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஆறுகளில் நீர்மட்டம் அபாய அளவைத் தாண்டி ஓடுகிறது. இதன் காரணமாக கரையோரங்களில் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்களை தண்ணீர் சூழ்ந்துள்ளது. பல்வேறு பகுதிகளுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவும், கஜகஸ்தானும், கடந்த 5 நாள்களுக்கும் மேலாக ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை சமாளிக்க கடுமையாகப் போராடி வருகின்றன. இரு நாடுகளும் அவசரகால நிலையை அறிவித்து, மீட்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளன. இரு நாடுகளிலும் சேர்த்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.



“நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆறுகளில் தண்ணீர் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இன்னும் அதிகரிக்கும். புதிய பகுதிகளுக்கு தண்ணீர் வரத் தொடங்கியிருக்கிறது. தற்போதைய சூழ் நிலையில், அதிபர் புடின், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்யும் திட்டம் எதுவும் இல்லை. பாதிப்பு மற்றும் மீட்பு பணிகள் தொடர்பாக தொடர்ந்து அதிபருக்கு தெரிவிக்கப்படுகிறது” என ரஷ்ய அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார்.

யூரல் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் ஆர்ஸ்க் நகருக்குள் தண்ணீர் புகுந்து நகரமே தத்தளிக்கிறது. இன்று ஓரன்பர்க் நகருக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. 550,000 மக்கள் வசிக்கும் ஓர்ஸ்க் நகரில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் நீர்மட்டம் 81 செமீ என்ற அளவுக்கு உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

1947-க்கு பிறகு இதுபோன்ற வெள்ளத்தை கண்டதில்லை என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். ஓரன்பர்க்கில் உள்ள யூரல் ஆற்றின் ஆழம் 996 செமீ. (33 அடி). நேற்றைய நிலவரப்படி, 930 செமீ அளவுக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய பகுதிகளில் உள்ள மக்கள் உடனடியாக வெளியேறும்படி நகர நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

வியாழக்கிழமை 11/04/2024

## பொதுப் போக்குவரத்தில் சிறப்புக் கண்காணிப்பு!

கியூபெக்,ஏப்ரல்11

மொன்றியல் பொதுப் போக்குவரத்தில் மனநலம் அல்லது போதைப்பொருள் அடிமையாதல் பிரச்சினைகள் உள்ளவர்க C2



# மாகாணத்தின் குறிக்கோள்களுக்கு எதிராக நகர சபைகளுடன் மத்திய அரசு உடன்பாடா?

## வீட்டோ சட்டத்தைக் கொண்டு வருகிறது அல்பேர்ட்டா

**அல்பேர்ட்டா,ஏப்ரல்11**

**நகர சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்திற்கு இடையிலான உடன்படிக்கைகளிற்கு வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் சட்டம் ஒன்றினை அல்பேர்ட்டாவின் முதல்வர் அறிமுகப்படுத்தியுள்ளார்.**

**மாகாணத்தின் குறிக்கோள்களுக்கு எதிராக செயற்படக் கூடிய மத்திய அரசாங்கத்தின் நிதிகளை கட்டுப்படுத்துவதே இந்தப் புதிய சட்டத்தின் நோக்கம் என அல்பேர்ட்டா முதல்வர் டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.**

வீடமைப்புத் தொடர்பில் மத்திய அரசாங்கமானது அல்பேர்ட்டா மாகாணத்தையும், அதில் உள்ள நகரங்களையும் வேறுபடுத்தி நடத்துவதாக ஸ்மித் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாகாணத்திற்கு வழங்கக் கூடிய நிதி ஒதுக்கீட்டுக்குப் பதிலாக, நகர சபைகளுக்கு அதிகளவு நிதியை மத்திய அரசாங்கம் வழங்கி பாரபட்சம் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய வாரங்களில், கல்கரி, எட்மன்டன் மற்றும் சிறு நகரங்களுக்கு துரித வீடமைப்பு நிதியின் கீழ் பல மில்லியன் டொலர்களை மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருந்தது.

# தேசிய பல் பராமரிப்புத் திட்டம் பற்றி விளக்கம் கேட்கும் பல் மருத்துவர்கள்

ஒன்ராரியோ,ஏப்ரல்11

தேசிய பல்-பராமரிப்புத் திட்டம் எவ்வாறு செயற்படப் போகின்றது எனத் தெரியாவிட்டால், பல் மருத்துவர்கள் அதில் பங்கேற்கமாட்டார்கள் என கனடிய பல் மருத்துவ சங்கத்தின் தலைவர் ஹீதர் கார் தெரிவித்துள்ளார்.

1960 களில் தேசிய மருத்துவ சிகிச்சை தொடங்கப்பட்டதன் மூலம் தூண்டப்பட்ட அச்சங்களுடன் சுகாதார அமைச்சர் எதிர்கொண்டுள்ள அச்சங்களை அவர் ஒப்பிட்டுள்ளார்.

பதிவுசெய்யப்பட்ட முதியவர்கள் அடுத்த மாதம் முதல் தேசிய பல்-பராமரிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தத் தொடங்குவதற்கு முன் மத்திய அரசு அதனை சரியாக விளங்கப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

'நாங்கள் என்ன ஒப்புக்கொள்கிறோம், நோயாளிகளைப் பராமரிப்பதற்காக நாங்கள் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்' என்று ஹீதர் கார் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சியுடனான லிபரல் கட்சியின் அரசியல் உடன்படிக்கையின் முக்கிய உறுதிமொழியான இந்த திட்டம், 90,000 டொலருக்கு கீழ் குடும்ப வருமானம் ஈட்டும் காப்பீடு செய்யப்படாத குடும்பங்களுக்கு பல் மருத்துவ காப்பீட்டை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பதிவு கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேலும் தகுதியுடைய 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்கள் சிகிச்சைப் பெறத் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டத்தினால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 13 பில்லியன் டொலர்கள் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# கார்பன் விலை நிர்ணயம் பற்றி பிரதமர் ட்ரூடோ மாகாண முதல்வர்களுடன் விவாதிக்க வேண்டும்!

## கன்சர்வேடிவ் கட்சியின் கோரிக்கைக்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவு

ஒன்ராறியோ,ஏப்ரல்11

கனடாவின் மாகாண முதல்வர்களுடன் கார்பன் விலை நிர்ணயம் குறித்த தொலைக்காட்சி 'அவசரக் கூட்டத்தில்' பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்க வேண்டும் என்ற கன்சர்வேடிவ் கட்சியின் கோரிக்கைகளை புதிய ஜனநாயகக் கட்சி ஆதரித்துள்ளது.

மத்திய அரசாங்கத்தின் கார்பன் விலை என்பது காலநிலைக் கொள்கையின் 'முற்று முழுதான முடிவல்ல' எனவும், புதிய ஜனநாயகக் கட்சியினர் மாகாண முதல்வர்களின் மாற்றுத் திட்டங்களுக்குத் தயாராகவுள்ளனர் என புதிய ஜனநாயகக் கட்சியின் சுற்றுச்சூழல் விமர்சகர் லோரல் கொலின்ஸ் தெரிவித்துள்ளார்.

லிபரல் அரசாங்கம் காலநிலை மாற்றத்தை ஓர் அரசியல் பிரச்சினையாகப் பயன்படுத்துவதாகவும் கொலின்ஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், மாகாண முதல்வர்களுடனான சந்திப்பு கனடியர்களை ஒன்றிணைக்கவும் புதிய யோசனைகளைத் தூண்டவும் உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'காலநிலை அவசரநிலையை எதிர்த்துப் போராடவும், வாழ்க்கைச் செலவு நெருக்கடியைச் சமாளிக்கவும் கனடியர்களை ஒன்றிணைக்க வேண்டும், மேலும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் அரசாங்கமே எங்களுக்குத் தேவை' என்று கொலின்ஸ் கூறியுள்ளார்.

ஐந்து வாரங்களுக்குள் மாகாண மற்றும் பிராந்தியத் தலைவர்களுடன் ட்ரூடோ சந்திக்க வேண்டும் என்று கோரும் கன்சர்வேடிவ் கட்சியின் பிரேரணைக்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவளித்துள்ளது.

### பொதுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மொன்றியல் போக்குவரத்து அதிகாரசபை பொதுப்போக்குவரத்து நிலையங்களில் பாதுகாப்பை அதிகரித்துள்ளது.

ஏப்ரல் 10ஆம் திகதி அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், 10 போக்குவரத்து நிலையங்களை கண்காணிப்பதற்கு சிறப்பு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிற பாதுகாப்பு ஊழியர்களை நான்கு குழுக்களாக நியமித்துள்ளது.

ஒவ்வொரு பாதுகாப்புக் குழுவும் மூன்று முதல் நான்கு நிலையங்களைக் கொண்ட குழுவிற்குப் பொறுப்பாகவுள்ளது.






# கியூபெக்கில் அரசியல்வாதிகளை அச்சுறுத்தினால் இனி அபராதம்!

கியூபெக்,ஏப்ரல்11

கியூபெக்கில் அரசியல்வாதிகளை அச்சுறுத்துபவர்களுக்கு 1,500 டொலர்களை அபராதம் விதிக்கும் புதிய சட்டமூலம் ஒன்றை கியூபெக் அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இதுதொடர்பான சட்டமூலத்தை ஏப்ரல் 10ஆம் திகதி கியூபெக்கின் நகர விவகாரங்களுக்கான அமைச்சர் சமர்ப்பித்தார்.

இந்த சட்டமூலம் நடைமுறைக்கு வரும்போது, 1,500 டொலர்கள் அபராதத்துடன், நீதிமன்ற இடைக்காலத் தடையுத்தரவும் பிறப்பிக்கப்படும்.

அரசியல்வாதிகளை அச்சுறுத்தும் கருத்துக்கள் மற்றும் வன்முறையான கருத்துக்களை தடுப்பதே இந்த சட்ட மூலத்தின் நோக்கம் என அமைச்சர் ஒன்ரே லெஃபோரஸ்ட் தெரிவித்துள்ளார்.



# பேரழிவு தரும் காட்டுத் தீ ஆபத்து இந்தப் பருவகாலத்தில் நேரலாம்!

ஒன்ராரியோ,ஏப்ரல்11

வழக்கத்திற்கு மாறாக வெப்பமான குளிர்காலம், பரவலான வறட்சி நிலைமைகள் மற்றும் எதிர்வரும் மாதங்களில் இயல்பை விட அதிகமான வெப்பநிலை இருக்கும் என்ற முன்னறிவிப்புக்குப் பிறகு, கனடா மற்றொரு பேரழிவு தரும் காட்டுத்தீ பருவ ஆபத்தில் இருப்பதாக மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வசந்த காலத்திலும் கோடை காலத்திலும் அதிக வறண்ட, வெப்பமான வானிலை எதிர்பார்க்கப்படுகிறது,

இதனால் நாட்டின் பெரும்பகுதி காட்டுத்தீ அபாயத்தில் உள்ளது என்று புதன்கிழமை தொழில்நுட்ப மாநாட்டின் போது அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு கியூபெக், கிழக்கு ஒன்ராரியோ மற்றும் மேற்கு கனடா உட்பட நாட்டின் பெரும்பகுதி ஏப்ரல் மாதத்தில் வழக்கத்தை விட முன்கூட்டியே மற்றும் அதிக தீ அபாயத்தை எதிர்கொள்கிறது.

இந்த காலகட்டத்தில் மழையின் அளவைப் பொறுத்து மே மற்றும் கோடை வரை இந்த அபாயங்கள் நீடிக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# தம்மைப் பொலிஸார் எனக் கூறி வயதான தம்பதியரிடம் மோசடி!

## சந்தேக நபர்களைத் தேடி வலை வீச்சு

ஒன்ராரியோ,ஏப்ரல்11

டொரன்டோ பொலிஸார் போல் நடித்து வயதான தம்பதியரிடம் பல்லாயிரக்கணக்கான டொலர்களை மோசடி செய்த சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஜனவரி 20ஆம் திகதி மாலை பொலிஸ்அதிகாரி என்று கூறிக்கொண்டு தம்பதியருக்கு ஒருவரிடமிருந்து அழைப்பு வந்துள்ளது.

இந்த ஆள்மாறாட்டம் செய்தவர், தம்பதியரிடம் கடனட்டைகள் மோசடியாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், அவர்கள் அவற்றை மாற்ற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பின்னர் அஞ்சல் செய்பவர்கள் போல் வீட்டிற்கு வந்ததும், தம்பதியினர் தங்கள் அட்டைகளை ஒப்படைத்துள்ளனர்.

குறித்த அட்டைகளைப் பயன்படுத்தி சந்தேகநபர்கள் 13,000 டொலர்கள் வரை செலவழித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தேகநபர்களின் படங்களை வெளியிட்டுள்ள பொலிஸார், பொது மக்களிடம் அவர்கள் குறித்த விவரங்களை கோரியுள்ளனர்.





# கனடாவுக்குள் கொண்டு வரப்பட்ட போதைப்பொருள்கள் கண்டுபிடிப்பு

## வலையமைப்பின் ஒன்பது பேர் மீது குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல்11

சட்டவிரோதமாகக் கனடாவுக்குள் கொண்டுவரப்பட்ட 2 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருள்கள் டொரன்டோவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கனடாவிற்கு சட்டவிரோத போதைப் பொருள்களை இறக்குமதி செய்து டொரான்டோ பெருநகரப் பகுதி மற்றும் பிற மாகாணங்களில் விநியோகித்தமை குறித்த குற்றவியல் வலையமைப்பின் விசாரணையைத் தொடர்ந்து ஒன்பது பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பல நகராட்சி, மாகாண மற்றும் மத்திய சட்ட அமலாக்க முகவர்களுடன் ஒத்துழைத்து, டொராண்டோ பொலிஸ் சேவை, ஒன்டாரியோ மாகாண காவல்துறை மற்றும் கனடா எல்லை சேவைகள் முகமை ஆகியவற்றுடன் இணைந்து இந்தத் தேடுதல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கனடா உள்ளிட்ட பிற நாடுகளுக்கு பல்வேறு மறைப்பு முறைகளைப் பயன்படுத்தி சட்டவிரோத போதைப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகப் புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் குறைந்தளவு பனிப்பொழிவு

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல்11 – பிரிட்டிஷ் கொலம்பியா ஆற்றுநீர் முன்னறிவிப்பு நிலையத்தின் ஏப்ரல் பனி கணக்கெடுப்பின்படி பிரிட்டிஷ் கொலம்பியாவில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த பனிப்பொழிவைக் காட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பனிப்பொழிவு 63 சதவிகிதம் இயல்பானதாக உள்ளது, இது இந்த வசந்த காலத்திலும் கோடைகாலத்திலும் வறட்சி அதிகரிக்கும் அபாயத்தைக் குறிக்கலாம் என முன்னறிவிப்பு நிலையத்தின் நீர்வியலாளர் ஜொனாதன் பொய்ட் தெரிவித்துள்ளார்.

1970இல் இந்த எண்ணிக்கைப் பதிவு செய்யப்பட்டு வருவதுடன், 1981 இல் 68 சதவீதம் மற்றும் 2015இல் 65 சதவீதம் சாதாரண பனிப்பொழிவு இருந்ததாக இந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட மாகாணத்தைச் சுற்றியுள்ள வானிலை நிலையங்களின் தரவின் பிரகாரம், 95 சதவீத பருவகால பனிப்பொழிவு பொதுவாக குவிந்து வருவதாக நிலையம் தெரிவித்துள்ளது.